இந்திய உச்ச நீதிமன்றம்

2022 ம் ஆண்டு மே மாதம் 23 ம் நாள்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு. எஸ். அப்துல் நசீர் மற்றும்

மாண்புமிகு நீதியரசர் திரு. விக்ரம் நாத்

உரிமையியல் மேல்முறையீட்டு எண். 4242/2022

ஆரவ் ஜெயின் ...மேல்முறையீட்டாளர்

-எதிர்-

பீஹார் பொதுப்பணித் தேர்வுக்குழு மற்றும் பிறர் ...எதிர்மேல்முறையீட்டாளர்

பணிகள் சட்டம் - 30 வது பீஹார் நீதித்துறை பணித் தேர்வு - நீதித்துறை அதிகாரிகள் தேர்வு - வேட்பாளர் நிலைத் தள்ளுபடி - நேர்முகத் தேர்வின் போது சான்றுகளின் அசல் சமர்பிக்காமை - பீஹார் பொதுப்பணி தேர்வுக்குழு (பி.பி.எஸ்.சி) 349 உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) பதவிக்கு தேர்வு நடத்த விளம்பரம் வெளியிட்டது - தேர்வு நடத்திய பிறகு தகுதியின் வரிசையில் வெற்றி பெற்றவர்களுக்கு குழு நியமனக் கடிதம் வழங்கியது. அசல் சான்றிதழ்கள் தரப்படாததால் எட்டு விண்ணப்பதாரர்களின் (மேல்முறையீட்டாளர்கள்) தேர்வு, குழுவால் ரத்து செய்யப்பட்டது. அவர்களது பிரிவில் கடைசியாகத் தெரிந்தெடுக்கப்பட்ட வேட்பாளரை விட மேல்முறையீட்டாளர்கள் அதிக மதிப்பெண்கள் எடுத்துள்ளார்கள் - பல்வேறு மனுக்கள் மூலம்

மேல்முறையீட்டாளர்கள் உயர்நீதிமன்றத்தை அணுகி அவை தள்ளுபடி செய்யப்பட்டது - மேல்முறையீட்டில் முடிவு : நேர்முகத் தேர்வின் போது தேவையான சான்றுகளின் நகல்கள் சுய ஒப்பத்துடன் தரப்பட்டு மற்றும் சில நாட்களுக்குள், அசலும் கூட பின்னர் சமர்ப்பிக்கப்பட்டது தெளிவாகிறது - குறிப்பிடப்பட்ட இந்த சான்றுகள் தவறாகக் காணப்பட்டது என்பது எதிர்மேல்முறையீட்டாளர்களின் வழக்கல்ல - இந்த அசல் சான்றிதழை நேர்முகத் தேர்வின் போது சமர்பிக்காத நடைமுறை காரணங்களுக்காக இந்த மேல்முறையீட்டாளர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன - விண்ணப்பதாரர்களை நிராகரித்தது முறையற்றது, நியாயமற்றது மற்றும் தேவையற்றது.

உரிமையியல் மேல்முறையீட்டு அதிகார வரம்பு : உரிமையியல் மேல்முறையீட்டு எண்.4242/2022.

பாட்னா உயர்நீதிமன்ற (உரிமையியல்) நீதிப்பேராணை மனு (சி.டபுள்யூ.ஜே.சி) எண். 24282/2019, நாள்- 4.5.2021 நாளிட்ட தீர்ப்புரை மற்றும் ஆணையிலிருந்து.

உடன்

உரிமையியல் மேல்முறையீட்டு எண்கள். 4243, 4244, 4246, 4245 மற்றும் 4247/2022.

ஆஜராகும் நபர்கள் சார்பாக மூத்த வழக்கறிஞர்கள் - ஆர். பாலசுப்ரமணியன், கோபால் சங்கர நாராயணன், திருமதி. அஞ்சனா பிரகாஷ், விஜய் ஹன்ஸாரியா, வழக்கறிஞர்கள் சச்சின் சர்மா, ராகுல் கவுர், சத்யவ்ரத் சர்மா, அனில் குமார் குலாட்டி,

செல்வி. பூஜா தர், செல்வி. இஷிதா சவுதிரி, வருண் சிங், நிதின் சலுஜா, அபிஜீத் குமார் பாண்டே, ராமன் கேஆர். சிங், தங்கேஷ், சாகேத் சிங், செல்வி. சங்கீதா சிங், செல்வி. சோமியாஸ்ரீ, திருமதி. நிரஞ்சனா சிங், நவீன் பிரகாஷ், சமீர் அலி கான், திருவாளர் பரேக் & கோ, கவுரவ் அகர்வால், சி. ஜார்ஜ் தாமஸ், அனுஜ் பிரகாஷ், குமார் மிஹிர், சாந்தனு சாகர், ஷஷாங்க் ஷேகர், அனில் குமார், குஞ்சேஷ் ரஞ்சன்.

இந்த நீதிமன்றத்தின் தீர்ப்புரையை வழங்கியவர் - மாண்புமிகு நீதியரசர் திரு. விக்ரம் நாத்.

1. எல்லா சிறப்பு அனுமதி மனுக்களிலும் அனுமதி வழங்கப்பட்டது.

2. 30 வது பீஹார் நீதித்துறை பணித்தேர்வு நடத்துவதற்காக, 349 உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) பதவிகளுக்கு தேர்ந்தெடுக்க, பீஹார் பொதுப்பணித் தேர்வுக்குழு விளம்பர எண். 6/2018 நாள் 23.8.2018-ஐ வெளியிட்டது. 349 பதவிகளின் விவரங்கள் பின்வருமாறு :

i) பொது / ஒதுக்கீடு செய்யப்படாத (01)-175 பதவிகள்

ii) எஸ்சி (02) - 56 பதவிகள்

iii) எஸ்சி (03) - 03 பதவிகள்

iv) இபிசி (04) - 73 பதவிகள்

v) பிற்படுத்தப்பட்ட வகுப்பு (05) 42 பதவிகள்

3. வடிகட்டும் தேர்வு, எழுத்துத் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு ஆகியவற்றை நடத்திய பிறகு, தேர்வுக்குழு தனது 2.12.2019 நாளிட்ட கடிதத்தில், தகுதியின்

வரிசைப்படி, 349 விண்ணப்பதாரர்களின் பெயர்களை பரிந்துரைத்தது. புள்ளி விபரங்களின் அடிப்படையில் 349 பரிந்துரைத்த நபர்களுள் 4 நபர்கள் கலந்தாய்வுக்கு வரவில்லை. அவ்வாறு, ஜனவரி 2020 முதல் டிசம்பர் 2020 வரை பல்வேறு நாட்களில் 345 விண்ணப்பதாரர்களுக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. மேலும், 345 விண்ணப்பதாரர்களுள் 3 விண்ணப்பதாரர்கள் பணியில் சேரவில்லை. அதேபோல, 7 விண்ணப்பதாரர்களின் தேர்வு, மாநில அரசால் பல்வேறு தேதிகளில் வழங்கப்பட்ட அரசாணை மூலம் ரத்து செய்யப்பட்டது. மேல்முறையீட்டாளர்கள் ஒப்புக்கொண்டவாறு, தேர்வு செய்யப்பட நபர்களில் இறுதியானவர், அவர்களது வகுப்பினர்கள் வாங்கிய மதிப்பெண்ணை விட, அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். ஆனால், நேர்முகத் தேர்வு அழைப்புக்கு கடிதத்தில் கோரப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுதலுக்காக தேர்வுக்குழு அவர்களது நியமனத்தை ரத்து செய்துள்ளது.

4. கல்வித் தகுதிக்கான சான்றிதழ்கள், முந்தைய பணியமர்த்துனரின் தடையின்மை சான்று, கடைசியில் படித்த கல்லூரி / பல்கலைக்கழகம் வழங்கிய நடத்தைச் சான்று மற்றும் இருப்பிடத்திற்கான பிற சான்றிதழ்கள் முதலியவற்றை, பணி ஒதுக்கீடு பயன் ஏதும் கோரப்பட்டால் ஜாதிச் சான்றிதழ் உட்பட, அதில் விவரிக்கப்பட்டவாறு அசல் சான்றிதழ்களை நேர்காணலின்போது சமர்பிக்கக் கோரியது நிபந்தனைகளில் ஒன்று. கோரப்பட்டவாறு தேர்வானவர்களில் சிலர் அசல் சான்றிதழ்களை சமர்ப்பிக்கவில்லை. அதன் காரணமாக 27.11.2019 ல் நடைபெற்ற கூட்டத்தில் அவர்களது தேர்வு, தேர்வாணையத்தால், ரத்து செய்யப்பட்ட 27.11.2019 அன்று தேர்வாணையத்தால் கூட்டப்பட்ட 102 வது கூட்டத்தில் 30 வது பீஹார் நீதிப்பணி தேர்வின் கீழ் (விளம்பரம் எண்.6/2018) 21.10.2019 முதல் 27.10.2019 வரை நடந்த நேர்முகத் தேர்வின் போது தரப்பட்ட கல்விச் சான்றுகள், மதிப்பெண் தாள்கள், ஆவணங்கள் மற்றும் பிற அடிப்படையில் தேர்வானவர்களின் குறைபாடுகள் மற்றும்

நேர்முகத் தேர்வு நேரத்தில் அசல் ஆவணங்கள் / சான்றுகள் தரப்பட வேண்டிய தேவையைப் பூர்த்தி செய்யாததையும், தேர்வாணையக்குழு ஆய்வு செய்தது மற்றும் ஒவ்வொரு தேர்வாளரையும் பரிசீலித்து, அந்த சொல்லப்பட்ட தேவையை நிரப்புவதில் குறைபாடு கண்டு பிடிக்கப்பட்டு, 58 நபர்களுக்கு வேறுபட்ட காரணங்களுக்காக தேர்வை ரத்து செய்துள்ளது.

5. பல்வேறு நீதிப்பேராணை மனுக்கள் வழியாக தனியாக அல்லது கூட்டாக சில விண்ணப்பதாரர்கள் பாட்னா உயர்நீதிமன்றத்தை அணுகியுள்ளனர். பாட்னா உயர்நீதிமன்ற நீதியர் ஆயம் எதிர்ப்புக்குள்ளான உத்தரவு மூலம் அத்தகைய விண்ணப்பதாரர்களுக்கு ஆதரவளிக்காமல், அவர்களது மனுக்களை தள்ளுபடி செய்தது. பாட்னா உயர்நீதிமன்றத்தின் உத்தரவால் பாதிக்கப்பட்ட, 8 விண்ணப்பதாரர்களால் தற்போதைய சிறப்பு அனுமதி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் நிராகரித்ததற்கான காரணம், அசல் சான்றுகள் தாராமை மட்டுமே என்பது பிரச்சனை இல்லை. அந்தந்த வகைகளில் கடைசியாகத் தேர்வு செய்யப்படவர்களை விட, எங்கள் முன் உள்ள இந்த எட்டு மேல்முறையீட்டாளர்கள் அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளனர் என்பதைத் தேர்வாணையம் ஒப்புக்கொள்கிறது.

6. இந்த எட்டு விண்ணப்பதாரர்களுள் 5 நபர்களான, அதாவது, மயன்க் குமார் பாண்டே (சி.அ.ம (சி) எண். 15819/21), ஆரவ் ஜெயின் (சி.அ.ம (சி) எண். 10776/21), ஆஷிஷ் சந்திரா (சி.அ.ம (சி) எண்.16198/21), சித்தார்த் சர்மா (சி.அ.ம (சி) எண்.11089/21) மற்றும் சஞ்சய் குமார் மிஸ்ரா (சி.அ.ம (சி) எண்.11089/21) பொது / ஒதுக்கீடு செய்யாத வகையினர். சுமித் குமார் (சி.அ.ம (சி) எண்.15809/21) இபிசி பிரிவைச் சார்ந்தவர். அனிதா குமார் (சி.அ.ம (சி) எண்.809/22) பட்டியல் வகுப்பினர் பிரிவைச் சார்ந்தவர்

மற்றும் ஆனந்தராஜ் (சி.அ.ம (சி) எண்.15819/21) பிற்படுத்தப்பட்டோர் வகுப்பைச் சார்ந்தவர்.

7. மேலே பெயரிடப்பட்ட 8 விண்ணப்பதாரர்களைப் பொறுத்து, 27.11.2019 நாளிட்ட கூட்டத்தில், கீழ்கண்ட தவறுதல் / குறைபாடுகள் தேர்வணைக் குழுவால் அறியப்பட்டுள்ளது:-

i) கடைசியில் படித்த கல்லூரி / பல்கலைக்கழத்திலிருந்து பெற்ற நடத்தைச் சான்றிதழ் அசலை தர ஆரவ் ஜெயின் தவறிவிட்டார் (27.11.2019 நாளிட்ட முடிவின் பட்டியலில் அவரது பெயர் வ.எண்.1 ல் இடம் பெற்றுள்ளது).

ii) கடைசியில் படித்த கல்லூரி / பல்கலைக் கழகத்திலிருந்து பெற்ற நடத்தைச் சான்றிதழ் அசலை சமர்ப்பிக்க ஆனந்தராஜ் தவறிவிட்டார். (27.11.2019 நாளிட்ட முடிவின் பட்டியலில் அவரது பெயர் வ.எண்.10 ல் இடம் பெற்றுள்ளது).

iii) இளங்கலை சட்ட படிப்பிற்கான அசலைத் தர சுமித் குமார் தவறிவிட்டார் (27.11.2019 நாளிட்ட முடிவின் பட்டியலில் அவரது பெயர் வ.எண்.19 ல் இடம் பெற்றுள்ளது).

iv) முந்தைய பணியமர்த்துனரிடமிருந்து பெற்ற தடையின்மை சான்றின் அசலைத் தர சஞ்சய் குமார் மிஸ்ரா தவறிவிட்டார் (27.11.2019 நாளிட்ட முடிவின் பட்டியலில் அவரது பெயர் வ.எண். 26 ல் இடம் பெற்றுள்ளது).

v) அனிதா குமார், பட்டியல் வகுப்பினர் பிரிவின் கீழ் (பெண்) விண்ணப்பித்திருந்தும், நேர்முகத் தேர்வின் போது, 2002 ல் வழங்கப்பட்ட (அவரது கணவர் பெயர் உள்ளடங்கிய) ஜாதி சான்றிதழை சமர்பித்திருந்தார். இருப்பினும், பின்னர், 13.11.2019 ல் அவரது தந்தை பெயர் குறிப்பிடப்பட்டுள்ள ஜாதி சான்றிதழையும் சமர்பித்திருந்தார். (27.11.2019 நாளிட்ட முடிவின் பட்டியலில் அவரது பெயர் வ.எண். 29 ல் இடம் பெற்றுள்ளது).

vi) சித்தார்த் சர்மா, கடைசியில் படித்த கல்வி நிறுவனத்தின் இந்திய வழக்குரைஞர்கள் சங்கத்தின் உறுப்பினரான, அசல் சான்றிதழை தரத் தவறிவிட்டார். இரண்டாவதாக, கடைசியில் படித்த கல்லூரி / பல்கலைக்கழகத்தின் நடத்தை சான்றிதழ் அசலை தரத் தவறிவிட்டார் (27.11.2019 நாளிட்ட முடிவின் பட்டியலில் அவரது பெயர் வ.எண். 36 ல் இடம் உள்ளது).

vii) ஆஷிஷ் சந்திரா, கடைசியாகப் படித்த கல்வி நிறுவனத்தில் நடத்தை சான்றிதழ் அசல் மற்றும் இணைப்பு தொடர்பான சான்றிதழை சமர்பிக்கத் தவறிவிட்டார். (27.11.2019 நாளிட்ட முடிவின் பட்டியலில் அவரது பெயர் வ.எண். 55 ல் இடம் பெற்றுள்ளது).

viii) மயங்க் குமார் பாண்டே, கடைசியாகப் படித்த கல்லூரி / பல்கலைக்கழகத்தில் வழங்கிய நடத்தைச் சான்றும் மற்றும் இணைப்புக்கான சான்றும் சமர்ப்பிக்கவில்லை. ஆயினும், வணிகவரி கூடுதல் ஆணையரால் வழங்கப்பட்ட நடத்தைச் சான்றிதழை சமர்பித்திருந்தார். (27.11.2019 நாளிட்ட முடிவின் பட்டியலில் அவரது பெயர் வ.எண். 56 ல் இடம் பெற்றுள்ளது).

8. 27.11.2019 நாளிட்ட கூட்ட நடவடிக்கை குறிப்புகளிலிருந்தும், அந்தந்த மனுக்களில் உள்ள குறிப்பான கூற்றுகளிலிருந்தும், தேவையான சுய ஒப்பம் இடப்பட்ட சான்றுகளின் நகல்கள், நேர்முகத் தேர்வு நேரத்தில் மேல்முறையீட்டாளர்களால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்றும் மற்றும் அசல்கள் கூட சிறிது நாட்களுக்குள் மற்றும் எவ்வாறாயினும் தேர்வாணையக் குழுவால் கூட்டம் நடைபெற்ற நாளான 27.11.2019 க்கு முன்னர் சமர்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெளிவாகிறது. இந்த உண்மைகள் எதிர்மனுதாரர்களால் எதிக்கப்பட்டாவோ மறுக்கப்படவோ இல்லை.

9. எந்த அரசு வேலைக்கும் விளம்பரத்தில் கூறப்பட்ட நிபந்தனைகளின்படி, பின்னர் அல்லது விசாரணையின் போது எந்த விண்ணப்பதாரராலும் தரப்பட்ட தகவல் சரியல்ல எனக் காணப்பட்டால், அத்தகைய விண்ணப்பதாரர்களின் விண்ணப்பம் ரத்து செய்ய நேரிடும் என்ற வகைப்பாடு இருக்கும். 27.11.2019 ல் நாளிட்ட முடிவில் சொல்லப்பட்ட இந்த சான்றிதழ்கள் எதுவும் சரியல்ல எனக் காணப்படவில்லை என்பது எதிர்மனுதாரரின் வழக்கல்ல. அவர்கள், அவர்களுக்குரிய வகையில் இறுதியில் தேர்வு செய்யப்பட விண்ணப்பதாரரின் மதிப்பெண்களை விட அதிகம் பெற்றிருந்தும் கூட, நேர்முகத் தேர்வு நடக்கும் போது அசல் சான்றிதழ்களைத் தரவில்லை என்ற நடைமுறை காரணத்தினால் மட்டுமே இம்மேல்முறையீட்டாளர்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளது.

10. ஒருவேளை மேல்முறையீட்டாளர்கள் வெற்றி பெற்றால் அவர்கள், அவர்களுக்குரிய வகையில் வைத்திட, வெவ்வேறு வகைகளில் உள்ள காலியிடங்களின் எண்ணிக்கையை பதிவு செய்ய தேர்வாணையக்குழுவையும் அரசையும் நங்கள் கேட்டுக்கொண்டோம். விளம்பர எண். 6/2018 க்கு எதிராக

பொதுப்பிரிவில் 5 காலிப்பணியிடங்கள் இருப்பதாகவும் மற்றும் இபிசி, எஸ்சி மற்றும் பிசி வகைகளுக்கு எதிராக காலிப்பணியிடங்கள் இல்லை என்றும் பீஹார் அரசின் பதிவுகளிலிருந்து தெரிய வருகிறது.

11. மீதமுள்ள இரண்டு காலிப்பணியிடங்களைப் பொறுத்த வரையில், அவை இரண்டு விண்ணப்பதாரர்களான, அதாவது ஸ்வாதி சதுர்வேதி (காத்திருப்போர் பட்டியலிலிருந்து) மற்றும் உயர்நீதிமன்றம் மற்றும் இந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின் படி, ராகேஷ் குமார் (அனுமதிக்கப்பட்ட காலத்திற்கும் பணியில் சேர முடியாதவர்) ஆகிய இரண்டு விண்ணப்பதாரர்களால் நிரப்பப்பட்டுள்ளன. சி.டபிள்யூ.ஜே.சி. எண். 3952/2020 ஆக ஸ்வாதி சதுர்வேதியால் தாக்கல் செய்யப்பட நீதிப்பேராணை மனு 1.3.2021 நாளிட்ட உயர்நீதிமன்ற அமர்வில் அனுமதிக்கப்பட்டு மற்றும் பீஹார் அரசால் தாக்கல் செய்யப்பட்ட எஸ்.எல்.பி. (சி) 11174/2021, 30.07.2021 ல் இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. ராகேஷ் குமரைப் பொறுத்தவரை, அவரது மனுவான சி.டபிள்யூ.ஜே.சி. எண். 3835/2021, 26.10.2021 ல் உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இந்த நீதிமன்றம், 18.02.2022 நாளிட்ட தீர்ப்பில் உரிமையியல் மேல்முறையீட்டு எண். 1517/2022 ஐ அனுமதித்துள்ளது.

12. மேல்முறையீட்டாளர்கள் சார்பாக வைக்கப்பட்ட வாதம் என்னவென்றால் எல்லா மேல்முறையீட்டாளர்களும், தேவையான சான்றிதழ்கள் / ஆவணங்களான சான்றொப்பமிடப்பட்ட உண்மை நகல்களை வழங்கியுள்ளனர். இருப்பினும், அதன் அசல் மட்டும் உரிய நேரத்தில் தரப்படவில்லை. அசல் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. பின்னர், அசல் சான்றிதழ்கள் சமர்பிக்கப்பட்டன என மேலும் பணிந்துரைக்கப்பட்டது.

13. அசல் சான்றிதழ்கள் சமர்பிக்கத்தேவை என்பது, தகுதிநிலை அல்லது தகுதிக்கு தொடர்பில்லாதது மற்றும் எவ்வாறாயினும் நியமனத்திற்கு முன் அல்லது தகுதியான பருவத்தின்போது, சரிபார்த்தல் மற்றும் கண்காணிப்பு அறிக்கை அரசால் எப்போதும் பெறப்படுமென மேல்முறையீட்டாளர்கள் சார்பாக மற்றொரு வாதம் முன் வைக்கப்பட்டது. எனவே, நேர்முகத் தேர்வின் போது, அசல் சான்றுகள் தரப்படாததை கட்டாயமாகக் கருதமுடியாது. அல்லது வேறுவகையில் கூறினால், அதனால் எந்த மாற்றமும் ஏற்படாது. நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றுகள் / ஆவணங்கள் சமர்பிக்கப்படாவிட்டாலும் கூட, அரசு, கண்காணிப்பு / சரிபார்த்தலை செய்திருக்கக்கூடும்.

14. அத்தகைய பணிந்துரையின்பேரில், அவர்களது விண்ணப்பத்தை தள்ளுபடி செய்த முடிவானது, தன்னிலையிலேயே சட்டத்திற்கெதிரானது, தேவையற்றது, காரணமற்றது மற்றும் மிகக் கடுமையானது என சமர்ப்பிக்கப்பட்டது. தேர்வு செய்யப்பட்ட முழுதும் தகுதிபெற்று மற்றும் முறையாகத் தேர்வுபெற்ற அனைத்து எட்டு மேல்முறையீட்டாளர்களும் நீதித்துறை அதிகாரிகளாக அவர்களது நியமனத்தை இழந்துள்ளனர். ஒப்புக்கொண்டவாறு, எல்லா மேல்முறையீட்டாளர்களும், அந்தந்த வகைகளின் கீழ் தேர்வு செய்யப்பட இறுதி நபரை விட அதிக மதிப்பெண்கள் பெற்றுள்ளனர். உயர்நீதிமன்றம் கூட அவர்களது மனுக்களைத் தள்ளுபடி செய்து தவறிழைத்துவிட்டது என மேலும் சமர்ப்பிக்கப்பட்டது.

15. மாறாக, பீஹார் பொதுத்தேர்வுக்குழு மற்றும் மாநில அரசு ஆகியோர் தரப்பில், விளம்பரத்தில், துண்டு வெளியீட்டில், நேர்முகத் தேர்வு அழைப்புக் கடிதம்

ஆகிய பல்வேறு நிலைகளில் விலக்களிக்க முடியாது என வாதிடப்பட்டது. அத்தகைய எந்த விதி விலக்கும், அவர்கள் வரம்பில் இல்லாத அவர்களது வரையறுக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றாததாக அமையும். நேர்முகத் தேர்வின் போது அசல் சான்றுகள் / ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளை நன்கு அறிந்த மேல்முறையீட்டாளர்கள், அவ்வாறு செய்யத் தவறியதின் பேரில், அவர்களது விண்ணப்பம் முறையாக நிராகரிக்கப்பட்டது என்று சமர்ப்பிக்கப்பட்டது.

16. முறையே வைக்கப்பட்ட வாதங்களில் தலையிடாமல், வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், விண்ணப்பதாரர்களை நிராகரித்தது, முறையற்றது, நியாயமற்றது மற்றும் தேவையற்றது என நங்கள் கருதுகிறோம். காலியிடங்கள் உள்ளன என்ற சங்கதியை கருத்தில் கொண்டு, அது தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும் எனில், அதிக எண்ணைக்கையில் நிலுவையிலுள்ள வழக்குகளை தீர்வு செய்வதற்கு ஏதுவாக நிறுவனத்திற்கு பயனளிக்கும் என்ற சங்கதியையும் நாங்கள் கருத்தில் கொண்டுள்ளோம்.

17. அடுத்து பரிசீலிக்கப்பட வேண்டிய அம்சம் யாதெனில், விளம்பரம் எண். 6/2018 க்கு எதிராக உள்ள காலியிடங்களில் எட்டு மேல்முறையீட்டாளர்களை சரி செய்வது தான். ஒதுக்கப்படாத வகையில் உள்ள 5 நபர்களைப் பொறுத்தவரை, அதாவது மயன்க் குமார் பாண்டே, ஆரவ் ஜெயின், ஆஷிஷ் சந்திரா, சித்தார்த் சர்மா மற்றும் சஞ்சய் குமார் மிஸ்ரா (மாநிலத்தின்படி காலியாக உள்ள ஐந்து இடங்கள்) ஆகியோர் இந்த இடங்களுக்கு சரிகட்டப்படலாம். இபிசி, எஸ்சி மற்றும் பிசி வகையின் கீழ் உள்ள 3 நபர்களைப் பொறுத்து பிரச்சனை தற்போது உள்ளது. இந்த 3

விண்ணப்பதாரர்களுக்கு எதிராக, சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளில் தற்போது உள்ளதாகக் கூறப்படும் எதிர்கால காலியிடங்களுக்கெதிராக மாநிலம் அதனை சரி செய்யலாம் அல்லது விளம்பரம் எண். 6/2018 க்கு உரிய வகையில் ஒரு பணியிடம் வீதம் 3 எதிர்காலப் பணியிடங்களில் மாநிலம் வாங்கலாம். அது, சொல்லப்பட்ட விளம்பர காலியிடங்களில் மாறுதலை ஏற்படுத்தலாம். அதன் அதிகாரம் எப்போதும் பணியமர்த்துனருக்கு உள்ளது. இபிசி, எஸ்சி மற்றும் பிசி வகையைச் சார்ந்த 3 மேல்முறையீட்டாளர்களை அமர்த்த எது சரியோ அந்த மேலே சொன்ன முறையில் அல்லது பிற எந்த வகையிலும் உள்ள மேல்சொன்ன நிலையை அரசு தனது விவேகம் மற்றும் விடுப்புரிமையில் செயல்பட நாங்கள் மேலும் விட்டுவிடுகிறோம்.

18. மேல்சொன்ன ஏற்பாட்டின்படி, விளம்பரம் எண்.6/2018 க்கு எதிராக ஏற்கனவே நியமிக்கப்பட்டு பணிபுரியும் நீதித்துறை அதிகாரிகளின் நியமனம் / தேர்வு பாதிக்கப்படக்கூடாது என்பதை நாங்கள் தெளிவுபடுத்துகிறோம்.

19. அந்த 8 மேல்முறையீட்டாளர்களும், அவர்களது தகுதியின் அடிப்படையில் அவர்களுக்குரிய மூப்பு நிலைக்கு உரியவர்கள்; இருப்பினும், இடைப்பட்ட காலத்திற்கு அவர்கள் எந்த ஊதிய நிலுவைக்கும் தகுதியற்றவர்கள், ஆனால் அவர்கள் சேர்ந்த நாள் முதல் தகுதியுடையவர்கள். அவர்கள் உடனே சேர அனுமதிக்கப்பட வேண்டும். எல்லா ஊதிய உயர்வு மற்றும் இடைக்காலத்தில் உள்ள பயன்கள் அவர்களுக்கு கருத்தியலடிப்படையில் உண்டு. அனால், நிலுவை தரப்படமாட்டாது.

20. மேல்முறையீடுகள் மேலே உள்ளவாறு அதன்படி அனுமதிக்கப்படுகிறது. 27.11.2019 நாளிட்ட தேர்வாணையக் குழுவின் எதிர்ப்புக்குள்ளான முடிவு, இந்த

மேல்முறையீட்டாளர்கள் என்ற முறையில் மற்றும் உயர்நீதிமன்றத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரைகளும் நீக்கறவு செய்யப்படுகிறது. செலவினம் குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

21. ஏதேனும் மனுக்கள் நிலுவையில் இருந்தால் அவை தீர்ப்பு செய்யப்படுகின்றன.

வழக்கிடை மனுக்கள் எண். 54711 மற்றும் 54713/2022.

22. வழக்கிடை மனு எண். 54711 அனுமதிக்கப்படுகிறது. பாட்னாவில் உள்ள உயர்நீதிமன்றம் சி.டபிள்யூ.ஜே.சி. 7551/2020 ல் 9.2.2022 ல் வழங்கிய தீர்ப்புரை மற்றும் ஆணையினைத் தொடர்ந்து, மனுதாரரின் நியமனத்தினை அமல்படுத்த எதிர்மனுதாரர்களுக்கு உரிய உத்தரவிடவும் மற்றும் மனுதாரரின் நியமன நடைமுறையில் இந்த மாண்பமை நீதிமன்றம் எஸ்.எல்.பி.(சி) எண். 10776/2021 ல் 23.7.2021 ல் தலையிடவில்லை என்பதனை தெளிவுபடுத்தி மேலும் உத்தரவிடவும் கோரி, தலையீட்டாளர் ஜோதி ஜோஷியை வேண்டியுள்ளார். இந்த மனுவை ஆய்வு செய்ய, சில கூடுதல் சங்கதிகளைக் குறிப்பிட வேண்டியது அவசியமாகிறது.

23. நியமனக் கடிதங்கள் வழங்கிய பின், மற்றும் விளம்பரம் எண். 6/2018 க்கு எதிரான 7 இடங்கள் காலியாக உள்ளன. காரணம், 4 விண்ணப்பதாரர், கலந்தாய்வில் பங்கேற்கவில்லை மற்றும் 3 நபர்கள் நியமனத்தைத் தொடர்ந்து பணியில் சேரவில்லை. மாநில அரசு, இந்த 7 விண்ணப்பதாரர்களின் விண்ணப்பத்தை ரத்து செய்தது. விளைவாக 349 காலியிடங்களில் 342 இடங்கள் மட்டுமே நிரப்பப்பட்டுள்ளன.

24. மாறாக, 27.11.2019 நாளிட்ட தீர்மானம் காரணமாக, விண்ணப்பங்கள் ரத்து செய்யப்பட்ட சில விண்ணப்பதாரர்கள் பல்வேறு மனுக்கள் மூலம் பாட்னாவில் உள்ள உயர்நீதிமன்றத்தை அணுகியுள்ளனர். அதே நேரத்தில், காத்திருப்போர் பட்டியலில் உள்ள மற்றொரு விண்ணப்பதாரரான ஸ்வாதி சதுர்வேதி, பாட்னாவில் உள்ள உயர் நீதிமன்றத்தில், அவர் காத்திருப்போர் பட்டியலில் ஒதுக்கப்படாத வகையின் கீழ் இருப்பதால், காலியிடத்தில் நியமனம் கோரி சி.டபிள்யூ.ஜே.சி. எண். 3952/2020 ஐ தாக்கல் செய்துள்ளார். உயர்நீதிமன்ற அமர்வு, 1.3.2021 நாளிட்ட தீர்ப்பில் ஸ்வாதி சதுர்வேதி மனுவை அனுமதித்து மற்றும் உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) பதவியில் நியமனம் செய்யப்படப் பரிந்துரைக்க பி.பி.எஸ்.சி.யில் ஒரு இடத்திற்கு கோரிக்கை அனுப்ப மாநில அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

25. ஸ்வாதி சதுர்வேதி வழக்கில், பிறப்பிக்கப்பட்ட 1.3.2021 நாளிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவிற்கு எதிராக பீஹார் மாநில அரசு எஸ்.எல்.பி (சி) எண். 11174/2021 தாக்கல் செய்து, அது இந்த நீதிமன்றத்தால் 30.7.2021 அன்று அது எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

26. பாட்னாவில் உள்ள உயர்நீதிமன்ற அமர்வு, இதற்கிடையில் 4.5.2021 ல் தற்போதைய மேல்முறையீட்டாளர்களின் மனுக்களை தள்ளுபடி செய்தது. அதன் பின்னர், மற்ற மேல்முறையீட்டாளர்களின் மனுக்களையும் தள்ளுபடி செய்தது. தற்போதைய மேல்முறையீடுகளில், முதல் வழக்கான ஆரவ் ஜெயினால் தாக்கல் செய்யப்பட்ட எஸ்.எல்.பி (சி) எண். 10776/2021 மற்றும் தொடர்புடைய எஸ்.எல்.பி(சி) எண். 11089/2021 ல், 23.07.2021 தேதியிட்ட உத்தரவில் உரிமையியல் நீதிபதி (இளநிலைப் பிரிவு) 3 பணியிடங்களை மனுதாரர்கள் சார்ந்துள்ள வகையில் தற்போதைய மனு முடிவிற்கு வரும் வரையில் காலியாக வைத்திருக்குமாறு

இடைக்கால உத்தரவு பிறப்பித்திருந்தது. மேலும், அதேபோன்ற இடைக்கால எஸ்.எல்.பி (சி) எண். 15809/2021 எஸ்.எல்.பி(சி) எண். 16198/2021 மற்றும் எஸ்.எல்.பி (சி) எண். 15819/2021 ல் 8.10.2021 அன்று இந்த விஷயம் முடியும் வரை 4 உரிமையியல் நீதிபதி (இளநிலைப்பிரிவு) பணியிடங்களை காலியாக வைக்க உத்தரவிடப்பட்டது. கடைசியாக 7.2.2022 அன்று, மனுதாரர்கள் வரும் வகையின் கீழ் தற்போதைய மனு தீர்வு செய்யும் வரை, உரிமையியல் நீதிபதியின் (இளநிலைப்பிரிவு) பணியிடத்தை காலியாக வைத்திருக்க அனிதா குமார் தாக்கல் செய்த எஸ்.எல்.பி (சி) எண். 809/2022 ல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

27. இடைத்தரப்பினரான ஜோதி ஜோஷி, பாட்னாவில் உள்ள உயர்நீதிமன்றம் முன்பு சி.டபிள்யூ.ஜே.சி. எண். 7751/2020 ல் ஒரு நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்தார். 23.7.2021 முதல் 7.2.2022 வரை இந்நீதிமன்றத்தால் இடைக்கால உத்தரவுகள் ஏற்கனவே பிறப்பிக்கப்பட்டிருந்தபோது, இந்த மனுவானது நீதியர் ஆயத்தின் 9.2.2022 தேதியிட்டு இறுதியான தீர்ப்புரை மூலம் முடிவு செய்யப்பட்டது. பாட்னாவில் உள்ள உயர்நீதிமன்றம் தனது 9.2.2022 தீர்ப்புரையில் அந்த சொல்லப்பட்ட நீதிப்பேராணை மனுவை அனுமதித்தது மற்றும் பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் பணியில் சேராததால் ஏற்பட்ட காலியாக உள்ள எல்லா பதவிகளுக்கு கோரிக்கையை அனுப்புமாறு மாநில அரசுக்கு உத்தரவிட்டது மற்றும் விளம்பரம் எண். 6/2018 க்கு எதிராக நியமனத்துக்கான தகுதியின் அடிப்படையில் ஒருங்கிணைந்த தகுதிவாய்ந்தோர் பட்டியலிலிருந்து விண்ணப்பதாரர்களை பரிந்துரைக்குமாறு பி.பி.எஸ்.சி.க்கு உத்தரவிட்டது. அந்த சொல்லப்பட்ட தீர்ப்பில் பத்தி 6 ல் உள்ளடக்கியுள்ள செயல்முறைப் பகுதி கீழே மீண்டும் தரப்பட்டுள்ளது.

"62. முடிவில், பரிந்துரைக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள் பணியில் சேராததால் ஏற்பட்ட காலியிடங்களான எல்லா பதவிக்கும் கோரிக்கை அனுப்பவும் மற்றும் ஒருங்கிணைந்த தகுதிப்பட்டியல் / தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியலிலிருந்து விளம்பரம் எண். 6/2018 க்கு எதிராக உள்ள உரிமையியல் நீதிபதி (இளநிலைப்பிரிவு) பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களைப் பரிந்துரைக்க பீஹார் பொதுப்பணி தேர்வாணையக் குழு (மூன்றாவது எதிர்மனுதாரர்) மற்றும் அதன் அமைப்பிற்கும் நான் உத்தரவிடுகிறேன்"

28. 9.2.2022 நாளிட்ட இந்த தீர்ப்புரை மற்றும் அதில் உள்ள உத்தரவுகள், இந்த நீதிமன்றத்தால் 23.7.2021, 8.10.2021 மற்றும் 7.2.2022 அன்று பிறப்பிக்கப்பட்ட இடைக்கால உத்தரவுகளுடன் நேரடியாக முரண்பட்டுள்ளது. வெளிப்படையாக, இந்த உத்தரவுகள் நீதியர் ஆயம் முன் வைக்கப்படவில்லை மற்றும் அதனை அறியாமல் உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவ்வாறிருக்க, பி.பி.எஸ்.சி மேலே சொல்லப்பட்ட இந்த நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால உத்தரவைக் கருத்தில் கொண்டு, 9.2.2022 நாளிட்ட தீர்ப்புரை மற்றும் உத்தரவை மாற்றியமைக்க ஏற்கனவே ஒரு மனுவை பி.பி.எஸ்.சி. தாக்கல் செய்துள்ளது. அந்த திருத்தம் கோரும் மனு உயர்நீதிமன்றத்தின் முன்பாக இன்னும் நிலுவையில் உள்ளது.

29. எனவே, பாட்னாவில் உள்ள உயர்நீதிமன்ற நீதியர் ஆயத்தின் எதிர்ப்புக்குள்ளான தீர்ப்புரைக்கு மிக முன்னதாக வழங்கப்பட்ட ஸ்வாதி சதுர்வேதியின் தீர்ப்புரையிலிருந்தோ, இந்நீதிமன்றம் வழங்கிய இடைக்கால உத்தரவுகளிலிருந்தோ, இந்தப் பயனையோ சமமான கோருரிமையையோ, ஜோதி

ஜோஷி உத்தரவிடக்கோரும் விண்ணப்பத்தில் வழங்கமுடியாது. அதன்படி, உத்தரவு கோரும் வழக்கிடை விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது.

மேல்முறையீடு அனுமதிக்கப்படுகிறது.

<u>பொறுப்புத்துறப்பு</u>

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்குட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும்".